Regional Bulletin / Puducherry / Tamil Script / 21-04-2023

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னாகாசிம்**

**தேதி : 21.04.2023** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் வளர்ச்சிக்காக குடிமைப் பணி அதிகாரிகள் ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்கு உரியது என குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மத்திய புலனாய்வுத் துறை, அமலாக்கத் துறை போன்ற மத்திய அரசு அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இன்று மகாவீர் ஜெயந்தி கொண்டாடுவதை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் நினைவு நாளை ஒட்டி, புதுச்சேரி பாரதி பூங்காவில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவ சிலைக்கு தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

குடிமைப்பணிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். 1947 ஆம் ஆண்டு சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் நாட்டின் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் குடிமைப் பணியாளர்கள் இடையே ஆற்றியே உரையை நினைவு கூறும் வகையில் ஆண்டு தோறும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

குடிமைப் பணியாளர் தினத்தை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்காக குடிமைப் பணி அதிகாரிகள் ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்கு உரியது என்றும், பணிக் காலம் முழுவதும் சவால்களை எதிர் கொள்ளும் குடிமைப் பணி அதிகாரிகள் அவற்றை திறம்பட கையாண்டு பணியாற்றி வருவதாகவும் கூறினார்.

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் நிர்வாக கட்டமைப்பின் முதுகெலும்பாக குடிமைப் பணி அதிகாரிகள் திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சியடைந்த நாடாக

குடிமைப் பணியாளர் தினம் 2 (6)

இந்தியாவை உருவாக்குவதற்கு குடிமைப் பணி அதிகாரிகள் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள் என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் குடிமைப் பணி அதிகாரிகள் முன்னணியில் உள்ளதாகவும், அவர்களின் பணி பாராட்டுதலுக்கு உரியது என்றும் தெரிவித்துள்ளார்.

மோடி (9)

மத்திய புலனாய்வுத் துறை, அமலாக்கத் துறை போன்ற மத்திய அரசு அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். அரசாங்கமும், அரசியல்வாதிகளும் அவற்றின் செயல்பாட்டில் தலையிடக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். புதுடெல்லியில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த பிரதமர், நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும், குறிப்பாக ஏழை மக்களுக்கு அதிகாரம் அளிப்பதே தமது

அரசின் குறிக்கோள் என்றும், குடிமக்கள் மீதான சுமையை குறைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

*மகாவீர் ஜெயந்தி* (16)

இன்று மகாவீர் ஜெயந்தி கொண்டாடுவதை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், அகிம்சை மற்றும் இரக்கத்தின் வடிவமான மகாவீரரின் பிறந்த நாளான இன்று, அன்பு மற்றும் அமைதியின் வழியில், நாகரீக சமுதாயத்தை உருவாக்கவும், நாட்டின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றவும் உறுதியேற்போம் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று காலை புதுடெல்லி பாரத் மண்டபத்தில் மகாவீரரின் 2 ஆயிரத்து 550 ஆவது நிர்வாண் மகோற்சவத்தை தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர், இந்தியா உலகின் பழமையான வாழும் நாகரீகம் மட்டும் அல்லாமல் மனித குலத்தின் பாதுகாப்பான புகலிடமாகவும் விளங்குகிறது என்றும், அனைவருக்காகவும் சிந்திக்கிறது என்றும் கூறினார். மனித நேயத்தின்

சொர்க்க பூமியாக இந்தியா திகழ்வதாக தெரிவித்த பிரதமர், மகாவீரரின் போதனைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

*பல்கலைக்கழக மானியக்குழு* (12)

பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசிய தகுதித் தேர்விற்கான விண்ணப்பதிவு இன்று தொடங்கி உள்ளது. மாணவர்களுக்கு ஜூனியர் ரிசர்ச் ஃபெலோஷிப் வழங்குவதற்கும், உதவி பேராசிரியர் நியமனம் மற்றும் 83 பாடப்பிரிவுகளில் பிஎச்டி சேர்க்கைக்கான தேர்வும் இந்தாண்டு ஜூன் 16 ஆம் தேதி நடத்தப்பட உள்ளது என்றும், இதற்கான இணையத்தளத்தில் அடுத்த மாதம் 10 ஆம் தேதி வரை விருப்பம் உள்ளவர்கள் பதிவு செய்யலாம் என்றும் தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது. தேர்விற்கான கட்டணத்தை அடுத்த மாதம் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் செலுத்தலாம் என்றும், அடுத்த மாதம் 13 ம் தேதி தொடங்கி 15 ஆம் தேதி வரை விண்ணப்பங்களில் திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர் என்றும் தேசிய தேர்வு முகமையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மோடி பேரணி (9)

ராஜஸ்தான் மாநிலம் ஜலோர் மக்களவை தொகுதியில் இன்று நடைபெற்ற தேர்தல் பேரணியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். சமையல் எரிவாயு இணைப்புகள், வீடுகளில் கழிப்பறை கட்டுதல் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதன் மூலம் பெண்களின் வாழ்க்கையை எளிதாக்க மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் கூறினார். காங்கிரஸ் சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்து வருவதாக குற்றம் சாட்டிய அவர், இது போன்ற கூட்டணியிடம் நாட்டை ஒப்படைக்க கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். இன்று மாலை பன்ஸ்வாராவில் நடைபெறும் தேர்தல் பேரணியிலும் மோடி உரையாற்ற உள்ளார்.

தேர்தல் (14)

முதல் கட்ட மக்களவை தேர்தல் நேற்று முன்தினம் முடிவடைந்ததை தொடர்ந்து, அடுத்த கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது. கட்சிகளின் மூத்த தலைவர்கள், நட்சத்திர பேச்சாளர்கள் அனைவரும் பேரணிகளிலும், பொதுக்கூட்டங்களிலும் பங்கேற்று, வாக்காளர்களின் வாக்குகளை சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இரண்டாம்

கட்டமாக, கேரளாவில் 20, கர்நாடகாத்தில் 14, ராஜஸ்தானில் 13, உத்திரபிரதேசம் மற்றும் மகராஷ்டிரத்தில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 7, அசாம் மற்றும் பீகாரில் தலா 5, மேற்கு வங்கம் மற்றும் சட்டீஸ்கரில் தலா 3, திரிப்புரா மற்றும் ஜம்மு-காஷ்மீரில் தலா 1 மக்களவை தொகுதிகளிலும் வரும் 26 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. மொத்தம் உள்ள 88 தொகுதிகளில் கேரளாவில் 20 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதில் 194 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். உத்திரபிரதேசத்தில் 8 மக்களவை தொகுதிகளுக்கு 91 வேட்பாளர்களும், மேற்குவங்கத்தில் 3 தொகுதிகளில் 47 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

3 ஆம் கட்ட தேர்தல் (11)

3 ஆம் கட்டமாக 10 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள மக்களவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த வெள்ளிக்கிழமை முடிவடைந்து, வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நடைபெற்றது. வேட்பு மனுக்களை திரும்ப பெற நாளை

திங்கட்கிழமை கடைசி நாளாகும். நாளை மாலை வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும்.

இதற்கிடையே, 9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 மக்களவை தொகுதிகளுக்கு 4 ஆம் கட்டமாக மே 13 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் இம்மாதம் 25 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

*ராஜ்நாத் சிங்* (11)

பாஜக மூத்த தலைவரும், பாதுகாப்புத் துறை அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங், மேற்கு வங்க மாநிலத்தின் முர்ஷிதாபாத் பாஜக வேட்பாளரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மம்தாபானர்ஜி தலைமையிலான திரினமுல் காங்கிரஸ் அரசு மதத்தின் பெயரால் பிரிவினையை உருவாக்குகிறது என்றும், பாஜக அதனை கடுமையாக எதிர்க்கிறது என்றும் கூறினார். ஜலாங்கி மாவட்டம் நர்சிங்காபூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், முர்ஷிதாபாத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களை மம்தாபானர்ஜி தவறாக வழிநடத்துகிறார் என்றும் குற்றம் சாட்டினார். மேற்கு வங்கத்திற்கு

மத்திய அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை கொண்டு வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

*மாயாவதி* (9)

உத்திரபிரதேசத்தில் அம்ரோஹா தொகுதியில் இன்று நடைபெற்ற பேரணியில் கட்சி தலைவர் செல்வி மாயாவதி பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், பாஜக வின் பேச்சுக்கும், செயலுக்கும் பெரிய வித்தியாசம் உள்ளது என்றும், பாஜக அரசினால் பெரும் முதலாளிகள் மட்டுமே பயனடைந்து வருவதாகவும், நாட்டின் விவசாயிகள் சிக்கலில் உள்ளதாகவும் கூறினார். மாநிலத்தில் பகுஜன் சமாஜ் கட்சி அரசு அமையும் போதெல்லாம் விவசாயிகளின் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுதாகவும், அவர்களின் பயிர்களுக்கு நியாயமான விலை வழங்கப்படுவதாகவும் கூறினார்.

காங்கிரஸ் தேர்தல் குழு கூட்டம் (6)

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்றது. அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி, மூத்த தலைவர்கள் மற்றும் பஞ்சாப் மாநில முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பஞ்சாப் மாநிலத்தில் மக்களவை தேர்தலுக்கான வேட்பாளர்களை இறுதி செய்வது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அகடமி தேர்வு(5)

தேசிய பாதுகாப்ப அகடமி மற்றும் கடற்படை அகடமி தேர்வு இன்று நாடு முழுவதும் நடைபெற்றது. புதுச்சேரியில் 2 மையங்களில், 3 அமர்வுகளாக நடைபெற்ற இத்தேர்வினை 46 ஆண்கள் 16 பெண்கள் என 62 பேர் எழுதினர். தேர்வர்களின் வசதிக்காக புதுவை அரசு சார்பில் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தேர்வு மையங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

*பாரதிதாசன் (6)*

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் நினைவு நாளை ஒட்டி, புதுச்சேரி பாரதி பூங்காவில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவ சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், செய்தித்துறை இயக்குனர் திரு தமிழ்ச்செல்வன் மற்றும் அதிகாரிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*பறவைக் காய்ச்சல் (7)*

கேரளாவில் பறவைக்காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அம்மாநிலத்தை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்தி உள்ளது. நீலகிரி மாவட்டத்தை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகவும், மேலும், கேரளாவில் இருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் தென்காசி மாவட்ட எல்லையில் கிருமிநாசினி தெளித்த பின்னரே அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் விபத்து(9)

ஜப்பானில் பாதுகாப்பு படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்தவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசு தெரிவிக்கிறது. கடலோர பாதுகாப்பு படைக்க சொந்தமான 2 ஹெலிகாப்டர்கள் IZU தீவிற்கு அருகே சென்றுக் கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டது. இதில் 8 பேர் பயணம் செய்ததாகவும், ஒருவர் மீட்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது. எஞ்சிய 7 பேரை தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு பாதுகாப்பு படையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐபிஎல்(8)

இன்று மாலை 3 மணிக்கு கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் தொடங்கிய ஐபிஎல் கிரிக்கெட் போட்டி தொடரின் இன்றைய ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் பெங்களுரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் விளையாடுகின்றன. தற்போது விளையாடி வரும் கொல்கத்தா

நைட்ரைடர்ஸ் அணி, சற்று முன் வரை ---------- ஓவர்களில் ------- விக்கெட் இழப்பிற்கு -------- ரன்கள் எடுத்திருந்தது.

இரவு 7.30 மணிக்கு சண்டிகரில் நடைபெற உள்ள மற்றொரு போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோத உள்ளன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டின் வளர்ச்சிக்காக குடிமைப் பணி அதிகாரிகள் ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்கு உரியது என குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மத்திய புலனாய்வுத் துறை, அமலாக்கத் துறை போன்ற மத்திய அரசு அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இன்று மகாவீர் ஜெயந்தி கொண்டாடுவதை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் நினைவு நாளை ஒட்டி, புதுச்சேரி பாரதி பூங்காவில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவ சிலைக்கு தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

----------